# நடிபபுவழிச் சொல்வளத்தைப் பெருக்குதல்
# பாலர் பள்ளி முதலாம் ஆண்டு
# பெரிய புத்தகம் 12
# 'ருசியோ ருசி'

**கண்ணோட்டம்:**

பிள்ளைகள் ஏற்கெனவே வாசித்த கதையையொட்டிப் பாத்திரமேற்று நடிக்கும்போது பேசுவதற்கு அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது. பிள்ளைகள் இத்தகைய நடவடிக்கையில் அதிக விருப்பத்தோடு ஈடுபடுவார்கள். இதனால், இவர்களது சொல்வளம் மேம்படுகிறது. மேலும், இதன்வழி தாங்கள் கற்றுக்கொண்ட புதிய சொற்களைப் பயன்படுத்திப் பார்க்கும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

**கற்றல் குறிக்கோள்கள்:**

**கற்றல் குறிக்கோள் 2: அடிப்படை மொழித்திறன்களை வளர்த்தல்**


1. **கதையைப்பற்றிய புரிந்துணர்வை வெளிக்காட்டுதல்**

- ✓ வாசித்துக் காட்டப்படும் கதைக்கு ஏற்ப முகபாவங்களைச் செய்தல்
- ✓ கதையில் தங்களைக் கவர்ந்த கதாப்பாத்திரத்தைப்பற்றிப் பேசுதல்

**படிநிலைகள்**

1. **முதன்மை இருக்கை:** பிள்ளைகளை அரை வட்டமாக உட்காரச் சொல்லுங்கள். அந்த அரை வட்டத்திற்கு முன்னால் ஒரு நாற்காலியை வையுங்கள். (**முதன்மை இருக்கை** -கல்வியாளர்க்குரிய வழிகாட்டி**,** பக்கம் 30-ஐ பார்க்கவும்)

2. பிள்ளைகளின் அரை வட்டத்திற்கும் நாற்காலிக்கும் இடையே தேனீ, வண்ணத்துப் பூச்சி, வெட்டுக்கிளி ஆகியவற்றின் பட அட்டைகளைத் தரையில் திருப்பி வையுங்கள்.



தேனீ



வெட்டுக்கிளி



வண்ணத்துப் பூச்சி

3. தயாராகப் பைக்குள் இருக்கும் பனிக்கூழ்க்குச்சிகளுள் ஒன்றைப் பிள்ளைகளைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள். (பாடம் ஆரம்பிப்பதற்குமுன் பனிக்கூழ்க்குச்சிகளில் பிள்ளைகளின் பெயர்களை எழுதுங்கள்).

4. தேர்ந்தெடுத்த பனிக்கூழ்க்குச்சியில் இருக்கும் பெயரை வாசியுங்கள். அந்தப் பிள்ளையிடம் தரையில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பட அட்டையைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள்.

5. பின்னர், அதிலுள்ள பூச்சியைப்போலப் பாத்திரமேற்று நடித்தவாறே முன்னால் இருக்கும் நாற்காலியில் பிள்ளையை அமரச் சொல்லுங்கள். (எ-டு: தேனீ தேனைக் குடிப்பது போல் நடிக்கச் சொல்லுங்கள். வண்ணத்துப் பூச்சியும், வெட்டுக்கிளியும் 'நிறையக் குடிக்காதே' என்று சொல்ல வேண்டும்).

6. அதன்பின், மற்றப் பிள்ளைகளிடம் பூச்சியாகப் பாத்திரமேற்று இருக்கும் பிள்ளையிடம் கதையையொட்டிக் கேள்விகள் கேட்கச் சொல்லுங்கள். பிள்ளைகள் சிந்திப்பதற்கு நேரம் வழங்குங்கள். (எ-டு: நாற்காலியில் அமர்ந்திருக்கும் பிள்ளை தேனீயின் கதாபாத்திரத்தை ஏற்றிருந்தால் அவரிடம் "நீ ஏன் வண்ணத்துப் பூச்சி 'நிறையக் குடிக்காதே' என்று சொன்னபோது கேட்கவில்லை?" என்று கேட்க வேண்டும்).

7. அனைத்துப் பிள்ளைகளுக்கும் நடிக்க வாய்ப்பு ஏற்படும்வரை இந்நடவடிக்கையைத் தொடருங்கள்.

8. இந்நடவடிக்கையின்போது இது என்ன பூ? எனக்குப் <u>பசிக்கிறது</u>. என்னும் தொடர்களைப் பயன்படுத்திப் பேசி நடிக்கச் சொல்லுங்கள்.

******************************